பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: தை 9 (23—1—68) செவ்வாய் ★ வெளியூர்: தை 10 (24—1—68) புதன் [இதழ்: 184

மொழிச் சட்டத்தைத் தமிழகம் ஏற்கவில்லை

மும்மொழித் திட்டம் நீக்கப்படும்— பள்ளிகளில் இந்தி அறவே எடுபடும்

இந்தி ஆணைச் சொற்களைக் கைவிட இணங்காவிட்டால் என்.சி.சி. படையே கலைக்கப்படும்

தமிழகச் சட்டமன்றத்தில் மொழிப் பிரச்சினை விவாதம்— அரசுச் சார்பில் அண்ணா தீர்மானம்

சென்னை, சன. 23—

"இந்திய நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மொழிச் சட்டத்தை இந்த மன்றம் ஏற்க மறுப்பதுடன், அதனோடு இணைந்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் செயல்படுத்த மறுக்கிறது என்பதை எடுத்துக்காட்டும் வகையில், தமிழக அரசு செயல்படுத்திவரும் மும்மொழித் திட்டத்தை அகற்றி, இந்தி மொழியைத் தமிழகப் பள்ளிகளிலிருந்து அறவே நீக்கி விடுவது என்றும், மாணவர்களின் என்.சி.சி. படையில் இந்தி ஆணைச் சொற்களை நீக்கிவிடுவது என்றும் இம்மன்றம் தீர்மானிக்கிறது; இதற்கு மத்திய அரசு இணங்காவிட்டால், என்.சி.சி. படையையே கலைத்துவிடுவது என்று இம்மன்றம் தீர்மானிக்கிறது"

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், இன்று தமிழகச் சட்டமன்றத்தில் மொழிப் பிரச்சினை குறித்து அரசுச் சார்பில் முன்மொழிந்த தீர்மானத்தில் குறிப்பிட்டார்கள்.

இன்று கூடிய தமிழகச் சட்டமன்றத்தின் அவசரக் கூட்டத்தில் மாண்புமிகு கல்வி - தொழிலமைச்சரும் அரசுக் கட்சித் தலைவருமான திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்கள் பின்வரும் தீர்மானத்தை முன்மொழிந்தார்:—

"1967-ம் ஆண்டு ஆட்சி மொழிகள் (திருத்த) சட்டத்தையும் அதைச் சார்ந்த தீர்மானத்தையும் இந்திய நாடாளுமன்றம் நிறைவேற்றியதன் விளைவாக இம்மாநிலத்தில் ஏற்பட்டுள்ள கடும் நிலைமை குறித்து ஆய்வு செய்தல் வேண்டும்."

இந்தத் தீர்மானத்துக்கு, எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் ஒரு திருத்தத் தீர்மானத்தைக் கொண்டுவந்தார்.

அவரை யடுத்து திரு. பாலசுப்பிரமணியம் (இடது கம்), டாக்டர் எச். வி. ஹண்டே (சுதந்தரா), மாரிமுத்து (பி.சோ.), டாக்டர் அபிபுல்லா பேக் (லீக்), ம பொ. சிவஞானம் (தமிழரசு), பூவராகன் (காங்கிரசு) ஆகியோர் தங்கள் திருத்தத் தீர்மானங்களை முன்மொழிந்தனர்.

வலது கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர் திரு. ஏ. கே. சுப்பையாவும், ச. சோ. கட்சி உறுப்பினர் திரு. நல்லசிவமும், தங்கள் திருத்தங்களைப் பின்னர் அளிப்பதாகக் கூறினர்.

கடைசியாக, முதலமைச்சர் அண்ணா அவர்கள் கொண்டுவந்த திருத்தத் தீர்மானத்தில் குறிப்பிட்டதாவது:—

"பல்வேறு மொழி—பண்பாடுகளைக் கொண்ட இந்தியாவில் ஒரே மொழி ஆட்சியை ஏற்படுத்தி — ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டையும் குலைக்கும் வகையிலும், ஒரு மொழியை இன்னொரு மொழி அடிமை கொள்ளும் வகையிலும் ஏற்பட்டுள்ள நிலையை மாற்றி, தமிழுக்கும், பிற தேசிய மொழிகளுக்கும் ஆட்சி மொழிகளாகவும், அவை ஆட்சி மொழிகளாக ஆகும்வரை ஆங்கிலம் நீடிக்கவும் அரசியல் சட்டம் திருத்தப்படவேண்டும்.

"நிறைவேற்றப்பட்டுள்ள மொழிச் சட்டம் இந்தியாவைப் பிளவுபடுத்தும் வகையிலும் அரசியலில் வெறுப்பும் குழப்பமும் வேதனையும் உண்டாக்கும் வகையிலும் இருப்பதுடன், 'நாடு இரு பிரிவுகளாகி விடுமோ' என அச்சமும் ஏற்பட்டுள்ளது. இந்தச் சட்டம் இந்தி பேசாத மக்களுக்கு அநீதியும் சங்கடமும் புதிய பளுவும் ஏற்படுத்துவதாகப் பல அரசியல் கட்சியினரும் ஒருமித்த கருத்தறிவித்திருப்பதால், இச்சட்டத்தை உடனடியாக நீக்கிவிட இம்மன்றம் வற்புறுத்துகிறது.

"மொழிச் சட்டத்துடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், மும்மொழித் திட்டத்தை வலியுறுத்தி இறுதியில் இந்தியையே ஆட்சி மொழியாக்கும் நோக்கம் கொண்டதாகவே இருக்கிறது!"

அடுத்து, அரசுத் தீர்மானத்தை ஆதரித்து, அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் பேசினார்.

அதனைத் தொடர்ந்து விவாதம் தொடங்கி நடந்துகொண்டிருக்கிறது.

திருத்தத் தீர்மானங்கள்

எதிர்க் கட்சித் தலைவர் திரு. கருத்திருமன் தமது திருத்தத் தீர்மானத்தில்,

"எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த உயர்தரக் குழு ஒன்றை அமைத்து, மொழிச் சிக்கலை ஆராய்ந்து பரிகாரம் தேடவேண்டும்"

என்று குறிப்பிட்டார்.

இடது கம்யூனிஸ்டுத் தோழர் பாலசுப்பிரமணியம் தமது தீர்மானத்தில் கூறியதாவது:—

பிரதேச மொழியான இந்திக்கு அரசியல் சட்டத்தில் உள்ள தனி உரிமையை நீக்கவேண்டும்; அரசியல் சட்டம் 8-வது பிரிவில் உள்ள எல்லா மொழிகளையும் ஆட்சிமொழிகளாக ஏற்கவேண்டும்; நாடாளுமன்ற நடவடிக்கைகள், அரசியல் சட்ட 8-வது பிரிவில் உள்ள எல்லா மொழிகளிலும் நடைபெறவும், ஏககாலத்தில் மொழிபெயர்க்கவும் ஆவன செய்யவேண்டும்; சட்டங்கள் —உத்தரவுகள் எல்லாம், மேற்கண்ட மொழிகளில் இருக்க வேண்டும்; மத்திய அரசுப் பணிமனைகளில், அந்தந்த மாநில மொழியே தொடர்பு மொழியாக இருக்க வேண்டும்; மாநிலங்களுக்கும்—மத்திய அரசுக்குமிடையே மாநில மொழியே தொடர்பு மொழியாக இருக்க வேண்டும்; மத்திய அரசுடன் மாநில மக்கள் தங்கள் தாய் மொழியிலேயே கடிதத் தொடர்புகொள்ள வேண்டும்; எல்லாத் தேசிய மொழிகளும் வளர மத்திய அரசு நிதியுதவியளிக்கவேண்டும்; மாநிலத்தில் நிர்வாக மொழியாகவும், பயிற்சி மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும் மாநில மொழியை ஐந்தாண்டுக்குள் செயல்படுத்த வேண்டும்; மொழிச் சிறுபான்மையோர், தங்கள் தாய் மொழியிலேயே கல்விபெற வசதி செய்யவேண்டும்.

"மும்மொழித் திட்டம் எவ்வித பயனும் அளிக்காது; தாய் மொழியுடன் வேறு ஏதேனும் நவீன மொழியை விருப்பபூர்வமாகக் கற்கலாம்.

"ஒரே மொழி ஆதிக்கம் ஏற்படுத்தக்கூடிய சட்டத்தையும் ரத்து செய்து, இந்தி பேசுவோருக்கும்—இந்தி பேசாதவர்களுக்கும் இடையே ஏற்றத்தாழ்வை நீக்கிடவேண்டும்."

திரு. எச். வி. ஹண்டே தமது தீர்மானத்தில்,

"அரசியல் சட்டத்தின் 17-வது பிரிவை நீக்கிவிட்டு இரு மொழிக் கொள்கைக்கு வகை செய்யவேண்டும்"

என்றார்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து தமது தீர்மானத்தில்,

"நாடாளுமன்றம் நிறைவேற்றிய மொழித் தீர்மானத்தை ரத்து செய்துவிட்டு, மொழிச் சட்டத்தை மறு பரிசீலனை செய்யவேண்டும்"

என்றார்.

திரு. ம. பொ. சிவஞானம் தமது தீர்மானத்தில் கூறியதாவது:—

"ஒரு வட்டார மொழியான இந்தியை ஆட்சி மொழியாக்கி —அதற்கு முன்பாத்தியதை கொடுத்து — மற்ற வட்டார மொழிகளுக்குப் பாரபட்சம் காட்டுவது, 'ஒரு மொழியே ஆதிக்கம் செலுத்துமோ' என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதால், தமிழும் மற்ற வட்டார மொழிகளும் அதனதன் மாநிலத்தில் ஆட்சி மொழியாகவும் பயிற்சி மொழியாகவும் நீதிமன்ற மொழியாகவும் ஆக வேண்டும்; அதுவரையில் மத்தியில் ஆங்கிலம் நீடிக்க வேண்டும்.

"மத்தியில் அளவுகடந்த அதிகாரம் குவிக்கப்பட்டிருப்பதால், 'இந்தி ஆதிக்கம் ஏற்படுமோ' என்ற அச்சம் ஏற்படுகிற காரணத்தால், 14 தேசிய மொழிகளையும் ஆட்சி மொழிகளாக்கி, மத்திய அரசு, நாட்டின் பாதுகாப்பு — போக்குவரத்து — வெளிநாட்டு உறவு ஆகிய மூன்று பொறுப்புக்களையும் வைத்துக்கொண்டு, மற்ற அதிகாரங்களை மாநில அரசுகளிடம் ஒப்படைக்க வேண்டும்."

குறட்பாவுடன் சட்டமன்றத் துவக்கம்

சென்னை, சன. 23—

இன்று காலை 10-30 மணிக்கு தமிழகச் சட்டமன்றத்தின் அவசரச் சிறப்புக் கூட்டம் துவங்கியது.

அவைத் தலைவர் சி. பா. ஆதித்தனார்,

'தூங்காமை, கல்வி துணிவுடைமை— இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவர்க்கு'

என்ற குறட்பாவைச் சொல்லி, சட்டமன்ற நிகழ்ச்சிகளைத் துவங்கினார்.

காலஞ்சென்ற சிதம்பரம் பிள்ளை

சட்டமன்றம் மரியாதை

சென்னை, சன. 23—

தென்காசித் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு. சிதம்பரம் பிள்ளை இயற்கையெய்தியதையொட்டி, அவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில், தமிழகச் சட்டமன்றக் கூட்டம் இன்று 20 நிமிட நேரம் ஒத்திவைக்கப்பட்டு மீண்டும் துவங்கியது.

பீகாரில் குடியரசுத் தலைவர் ஆட்சி?

பாட்னா, சன. 23—

பீகாரில் ஐக்கிய முன்னணி அரசு கவிழுமானால், அங்கு குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டு வருவதற்கு வழி கோலப்பட்டுவிட்டதாம்!

மாற்றுக் கட்சியினர் அரசு அமைப்பதற்குக் கவர்னர் கனுங்கோ விரும்பவில்லையாம்!

விபூதி மிஸ்ரா மீது உரிமைப் பிரச்சினை!

சென்னை, சன. 23—

"நாடாளுமன்றத்தில் விபூதி மிஸ்ரா என்னும் உறுப்பினர், 'தென்னாட்டவர், ரூ. 25 கொடுத்ததால் இந்தி கற்றுக் கொள்வார்கள்' என்று கூறியது, இந்தச் சட்டப் பேரவையின் உரிமையில் தலையிடுவதாகவும் தென்னாட்டவரை அவமதிக்கும் வகையிலும் இருப்பதால் இதனை உரிமைக் குழு பரிசிலனைக்கு விடவேண்டும்"

என்று இன்று சட்டமன்றத்தில், இடதுசாரிக் கம்யூனிஸ்டு உறுப்பினர் ஓர் உரிமைப் பிரச்சினை எழுப்பினார்.

"இதில் சில சிக்கல்கள் உள்ளதால் அவற்றை ஆராய்ந்து பார்க்க வேண்டும்"

என்று கூறி, இந்த உரிமைப் பிரச்சினையைத் தள்ளி வைப்பதாக அவைத் தலைவர் கூறினார்.

பஸ் மோதி மாண்ட மாணவர்கட்கு இரங்கல்

சென்னை, ஜன. 23—

இன்று தமிழகச் சட்டமன்ற அவசரச் சிறப்புக் கூட்டம் துவங்கியதும், முதல் நிகழ்ச்சியாக அவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள்,

"பஸ் மோதி மாண்ட இரண்டு மாணவர்களின் குடும்பங்கட்கும் இம்மன்றம் தனது இரங்கலைத் தெரிவித்துக்கொள்கிறது"

என்று அறிவித்தார்.

திடீர்த் தமிழ்ப் பற்று எங்கிருந்து வந்தது?

அவர்களின் கடந்தகால துரோக வரலாறு நமக்குத் தெரியாதா?

தமிழ்க் காவலர்களே இன்றைய ஆட்சியில் இருப்போர்!

நக்கீரர் கழக ஆண்டுவிழாவில் அமைச்சர் கருணாநிதி விளக்கம்

சென்னை, சன. 23—

"இன்றையத்தினம் மொழியின் பெயரால் நடைபெறுகின்ற போராட்டத்துக்குக் கதாநாயகர்கள் யார் யார் என்பதை நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்; அவர்கள் உண்மையான கதாநாயகர்கள் அல்லர்; நாடகத்தின் கடைசியில் முகமூடி கிழிக்கப்படுகிற 'பக்கா' வில்லன்கள் போன்றவர்கள் என்பதையும் நீங்கள் உணரவேண்டும்.

"தமிழ் மொழியைக் காக்கவும், தமிழர்கள் உரிமையைக் காக்கவும் இந்த அரசு பாடுபடும்.

"மாணவ இளைஞர்களும், சிறுவர்களும், 'உண்மை எது—பொய் எது—வாய்மை எது—வஞ்சகம் எது' என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்"

என்று, பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், நக்கீரர் கழக விழாவில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றுகையில் கூறினர்.

சென்னை நக்கீரர் கழகத்தின் 27-ம் ஆண்டு நிறைவு விழாவும்—தமிழ்த் திருநாளும் சன. 21-ம் நாளன்று பாலர் அரங்கில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றன.

காலையில் தொழிலறிஞர் ஜி. டி. நாயுடு தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கினை, திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் துவக்கிவைத்தார்கள்.

மாலை நடைபெற்ற விழாவுக்கு டாக்டர் சி. இலக்குவனர் தலைமை வகித்தார்; சிறுவை மோகனசுந்தரம் வரவேற்ருர்; திரு. இரா. பூங்குன்றன் வாழ்த்துச் செய்திகளைப் படித்தார்; புலவர் கா. சி. தனக்கோடி ஆண்டறிக்கை படித்தார்.

பேராசிரியர் இலக்குவனரின் தலைமைப் பேருரைக்குப் பின், அருளப்ப அடிகளார் வாழ்த்துரை வழங்கினர்.

அடுத்து, பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார், 'தமிழ் கொடுத்ததும் கொண்டதும்' என்ற தலைப்பில், அரியதோர் ஆராய்ச்சிச் சொற்பொழிவினை நிகழ்த்தினர்.

பின்னர், அமைச்சர் திரு. கருணாநிதி அவர்கள், போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கினர்; திருவள்ளுவர் தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர்களுக்குப் புத்தாடை அணிவித்துப் பரிசுப் பொருள்களை வழங்கினர்.

அமைச்சர் உரைக்குப் பின், ஊ. செயராமன் நன்றி கூற—நாட்டு வாழ்த்துடன் விழா இனிது முடிந்தது.

அமைச்சர் தொடர்ந்து பேசியதாவது:—

"இங்கு அமைச்சர் என்ற முறையில் நான், புலவர்களுக்குப் பரிசுகளை வழங்கினேன்; என்னுடைய கரத்தினுல் துண்டையும், சிறு நூல்களையும் புலவர்கள் பெற்ற போது என் மனக்கண்ணுல்—அந்தக் காலத்தில் புலவர்கள், மன்னர்களிடத்தில் யானைகளையும், பெரிய தட்டுகளில் பொற்காசுகளையும் பெற்றதை எண்ணிப் பார்த்தேன்.

அரசனுக்குச்சமமாக அமருகின்ற தகுதியைப் பெற்றிருந்தனர் அந்தக் காலத்துப் புலவர்கள்; இடைக்காலத்தில் புலவர்கள், நகைச்சுவைக்குஉரியவர்களாக்கப்பட்டார்கள் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

ஆனுல் இன்றைய நிலைமை அப்படி இல்லை; இன்று நாட்டை ஆண்டு கொண்டிருப்பவர்கள் ஒரு குறிப்பிட்ட கட்சியைச் சார்ந்தவர்கள் என்ருலும், தமிழ்ப் புலவர்களின் உணர்ச்சியை மதிப்பவர்கள்!

'தமிழுக்கு ஒரு பொற்காலம் தோன்றியிருக்கிறது' என்று நாம் பெருமைப்படுகின்ற அதே நேரத்தில், வேறு சில ஆபத்துக்கள் நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கின்றன; அதைத் தடுக்க நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய முயற்சிகள் என்ன என்பதை இந்த விழாவில் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

1937-ம் ஆண்டிலிருந்து இந்த நாட்டில் தமிழ் காக்க வேண்டுமென்ற உணர்ச்சி எழுந்தது; அப்பொழுது நான் மாணவனுக இருந்த நேரத்தில், என் தலைமையில் ஊர்வலம் சென்ற காட்சி இன்னும் எனக்குப் பசுமையாக நினைவு இருக்கிறது; அந்த நேரத்தில் சென்னைக் கடற்கரையில் சோமசுந்தரபாரதியார் முழங்கினுர்; பெரியாரும் அவரைத் தொடர்ந்து அறிஞர் அண்ணு அவர்களும், வேறு பல தமிழ்ப் புலவர்களும் இந்தி எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்டதால் அதுவே நல்ல தமிழ் உணர்வாக மாறியது!

அன்று தொடர்ந்து இன்றுவரை 'தமிழ் மீது வேற்று மொழி ஆதிக்கம் செலுத்தக்கூடாது' என்ற உறுதி ஏற்பட்டது! அந்த முயற்சிக்கு உரியவர்களால் தமிழுக்கு ஆபத்து ஏற்பட்டுவிடுமா?

தாய் மொழியாம் தமிழுக்காக ஆண்களும் பெண்களுமாக ஆயிரக்கணக்கானவர் சிறைக்குச் சென்ருேம்—போராட்டத்தில் ஈடுபட்டோம்!

தமிழ்மொழியைக் காப்பாற்றத் தீயிலே வெந்து மடிந்த தியாகச் செம்மல்களைப் பார்த்து, 'ஏன் செத்தார்கள் தெரியுமா?—கடன் வாங்கியிருந்தார்கள்; அதைக் கொடுக்க முடியவில்லை; அதனுலே செத்தார்கள்' என்று கேலி பேசினுர்கள்!

'வயிற்று வலி இருந்தது; வியாதிக் கொடுமை தாங்காமல் தற்கொலை செய்துகொண்டார்கள்' என்று அந்தத் தியாகச் செம்மல்களின் கல்லறையைப் பார்த்துக் காரி உமிழ்ந்தார்கள்!

"இவர்கள் தமிழைக் காக்கும் அரசாக இருக்கிருர்களே; நம்முடைய காலத்தில் பாரதிக்குச் சிலை உண்டா—பாரதிதாசனுக்குச் சிலை உண்டா—நாம் வைக்கத் தவறிய வ.உ.சி.-க்குக்கூட இவர்கள் சிலை வைத்துவிட்டார்களே" என்றெல்லாம் பொருமைப்பட்டு, இந்த அரசைக் கவிழ்க்கின்ற நோக்கத்துடன் பேசித் திரிபவர்களா உண்மையான தமிழ்ப் பற்றுள்ளவர்கள்? எங்கிருந்து வந்தது—இப்போது இவர்களுக்குத் தமிழார்வம்?

முகவை மாவட்டத்தில் வந்து கொண்டிருந்த தமிழக அரசு பேருந்தைப் பத்து—பதினைந்து பேர் வழிமறித்து, 'கன்னித் தமிழைக் காக்கமுடியாத கருணாநிதியே இராஜினமாச் செய்' என்று எழுதினுர்கள்—'தமிழக அரசுப் போக்குவரத்து' என்று தமிழில் எழுதிய சின்னத்தைத் தார் கொண்டு அழித்துவிட்டு எழுதியிருக்கிருர்கள்! இவர்கள் தான் தமிழைக் காப்பாற்றுகிருர்களாம்!

'தார்கொண்டு தமிழை அழித்த கரத்தைத் தடுத்து நிறுத்தி, தமிழைக் காப்பாற்றவில்லை' என்ற கருத்தில் எழுதினுர்களோ என்னவோ—அப்படிப்பட்ட வன்முறையில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை!"

குடந்தைப் பகல் கூத்து!

'தேசீய மாணவர் மாநாடு' என்ற பேரால் காங்கிரசுத் தலைவர்களின் முன்னிலையில் கும்பகோணத்தில் கூடிய கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் வாசகங்களைக் கவனித்தீர்களா?

'இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டத்தில் பாதிக்கப்பட்ட—மரணமடைந்த மாணவர்களுக்கு அந்தக் கூட்டம் அஞ்சலி' செலுத்துகிறதாம்!

'1965-ல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போர்க்களத்தில் உயிர்நீத்தவர்களை இது குறிக்கிறதோ' என்று யாரும் ஐயுற வேண்டாம்; அப்போதைய மாணவர்கள், 'காங்கிரசுவாலா'க்களின் கருத்துப்படி,

"தி.மு. கழகத்தினரால் தூண்டிவிடப்பட்டவர்கள்—

"எடுப்பார் கைப்பிள்ளையாக இருந்தவர்கள்—

"காபிக்கும் பிரியாணிக்கும் ஆசைப்பட்டு காலித்தனம் புரியத் தெருக்களில் சுற்றிக்கொண்டிருந்தவர்கள்!"

1968 போராட்டத்தில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு அஞ்சலி செலுத்துகிறதாம்!

பாதிக்கப்பட்டவர்களுக்கும் — இறந்தவர்களுக்கு ஒப்பாக—அஞ்சலி செலுத்தும் தீர்மானம், அளவுக்கு மீறிய வெளிவேடத்தின் வேகத்தைக் காட்டுகிறதே தவிர, உண்மையான அனுதாபத்தைக் காண்பிக்கவில்லை!

மேலும், கடந்த ஆண்டு டிசம்பரிலும், கடந்த இரண்டொரு வாரமாகவும் நடைபெற்ற மாணவர் கிளர்ச்சிகளில்—இரு மாணவர்கள் பஸ் மோதி பரிதாபமாக இறந்தார்கள் என்கிற சோகச் செய்தியைத் தவிர—பாதிக்கப்பட்ட மாணவர்களின் பட்டியலைக் காண்பிக்க முடியுமா?

இறந்துபோன இரு மாணவர்களும், காங்கிரசு ஆட்சியின்போது ஏவிவிடப்பட்ட அடக்குமுறைகளைப்போல், கழக ஆட்சியின் செயல்களால் சாகவில்லை; தற்செயலாக நேர்ந்த நெஞ்சம் உருக்கும் சம்பவமே அது!

அரசின் கொள்கையால்—போலீசின் 'அடக்குமுறை'யால் அந்த இரு மாணவர்களும் இறந்தார்கள் என்பதை, இறந்துபட்ட மாணவர்களின் பெற்ருேர்கள்கூடத் துணிந்து சொல்ல முடியாது!

இருந்தாலும், முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள், அந்த இரு மாணவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்குவது குறித்து நடவடிக்கை எடுப்பதாகப் பெருந்தன்மையோடு குறிப்பிட்டார்.

ஆர அமர நெடுநாள் கழித்துக் குடந்தையில் கூடி அஞ்சலி செலுத்திய 'காங்கிரசுவாலா'க்களைப்போலல்லாமல், 'இரு மாணவர்கள் இறந்தார்கள்' என்று கம்பியில்லாச் செய்தி வந்தவுடனேயே, கண்ணீர் மல்க அனுதாபம் தெரிவித்த அன்புருவம் அறிஞர் அண்ணு அவர்கள் தாம் என்பதை நாடு அறியும்—நல்லவர் அறிவர்—உண்மையான இந்தி எதிர்ப்பைக் காட்டும் மாணவமணிகள் அறிவர்!

அது மட்டுமல்ல; பக்தவத்சலம் காலத்து அடக்குமுறையின் காரணமாக இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது உயிர்நீத்த தியாகிகளுக்கு வணக்கம் தெரிவிக்கும் வகையிலும், போலீசாரின் அடக்குமுறைகளைக் கண்டிக்கும் வகையிலும் அனுதாபத் தீர்மானங்களை நிறைவேற்றிய—

சென்னை
கோவை
நெல்லை
வேலூர்

மற்றும் தமிழகத்தின் பல்வேறு நகராட்சி மன்றங்கள் பக்தவத்சலம் ஆட்சியால் கண்டனத்திற்குள்ளாகி, 'அத்தகு தீர்மானங்களை உடன் நிகழ்ச்சிக் குறிப்புகளிலிருந்து நீக்க வேண்டும்' என்று காலக்கெடு கொடுக்கப்பட்டு—கெடுபிடிக்கு உள்ளாக்கப்பட்டிருக்கின்றன!

இவைகளைத் தமிழகத்து மக்களும் குறிப்பாகத் தமிழகத்து மாணவர்களும் மறந்துவிட முடியாது!

இப்போது குடந்தையில் கூடி, நடைபெறு[...] செயல்களுக்கு நீலிக்கண்ணீர் வடிக்கும் காங்[...]கிரசுத் தலைவர்கள்—மாணவர்கள் தீர்மான[...] 'ஏமாற்று வேலை' என்பதைத் தவிர வே[...] என்ன?

நகராட்சிகள் போட்ட தீர்மானத்தை ரத்து[...] செய்யுமாறு ஆணை பிறப்பித்த அதே காங்கி[...]சார், இப்போது குடந்தையில் கூடி முதலை[...] கண்ணீர் வடிப்பதை மாணவர்கள் பொரு[...]படுத்துவர் என்று எவரும் நினைக்கத் தேவை[...]யில்லை!

—தோழன்

காய்—கனி—பூ மூலம் அந்நியச் செலாவணி

மத்திய அமைச்சர் யோசனை

சென்னை, சன. 21—

பழம், பூ, மற்றும் காய்கறி வகைகளை ஏற்றுமதி செய்வதன் மூலம் அயல்நாட்டுச் செலாவணியை ஈட்ட இந்திய ஏற்றுமதியாளர்கள் தீவிரமாக ஆராயவெண்டும்" என மத்திய போக்குவரத்துத் துறையமைச்சர் திரு. வி. கே. ஆர். வி. ராவ் கேட்டுக் கொண்டார்.

'காய்கறிகள் ஏற்றுமதி மூலம் பல இலட்சக்கணக்கான டாலர்களை ஈட்டமுடியும்' என்ருர் அவர்.

ஏற்றுமதி பற்றிய கருத்தரங்கில் அவர் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இந்த யோசனையைத் தெரிவித்தார்.

அண்ணு உறுதிமொழியை ஏற்று அமைதி காப்போம்!

கிளர்ச்சி நடவடிக்கையால் தமிழக அரசு முயற்சிக்குக் குந்தகமே ஏற்படும்

தி.மா.மு.க. கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்க[...]

திருச்சியில் கூடிய திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கூட்டத்தில் மொழிப் பிரச்சினை குறித்து நிறைவேற்றப்பட்ட ஐந்[...] தீர்மானங்கள் நேற்றைய இதழில் வெளியிடப்பட்டுள்ளன; மற்ற[...] தீர்மானங்கள் வருமாறு:—

6. தமிழ்ப் பயிற்சி மொழித் திட்டம் நன்முறையில் நிறைவேற தீவிர நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று தமிழக அரசினை இக்குழு கேட்டுக் கொள்கிறது.

7. மொழி அறப்போரில் உயிர்நீத்த தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்துகின்ற வகையில் சனவரி 25-ம் நாளை, 'தியாகிகள் தினம்' என்று அறிவித்ததற்காகத் தமிழக அரசினைப் பாராட்டுவதோடு, ஆண்டுதோறும் அந்நாளை விடுமுறை நாளாக மேற்கொள்ளுமாறு இக்குழு கேட்டுக் கொள்கிறது.

8. (அ) தமிழக மக்களின் மொழி உரிமைகளைக் காக்கவும் இந்தித் திணிப்பினைத் தடுக்கவும் தேவையான பணிகளைத் தமிழக அரசு மேற்கொள்ளும் என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் தந்திருக்கும் உறுதிமொழிகளை மாணவர்கள் மனநிறைவுடன் ஏற்றுக்கொள்வதோடு, மொழிப் பிரச்சினையில் தீர்வுகாணும் முழுப் பொறுப்பினையும் தமிழக அரசிடம் ஒப்படைத்து நேரடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதில்லை என்று இக்குழு உறுதி அளிக்கிறது.

(ஆ) இந்த முடிவினை ஏற்றுக்கொள்வதோடு, நேரடி நடவ[...]கைகள் எதிலும் இறங்கவேண்டாம் என்று தமிழக மாணவர்[...] அனைவரையும் இக்குழுக் கேட்டுக் கொள்கிறது.

(இ) மாணவர்களின் தற்போதைய கிளர்ச்சிகள், இந்திஎதிர்[...] உணர்ச்சிக்கும் அந்த உணர்ச்சியின் அடிப்படையில் அமைக்க[...] பட்ட தமிழக அரசின் பணிகளுக்கும் குந்தகம் விளைவிப்பதாக அமையும் என்று இக்குழு கருதுகிறது.

(ஈ) இந்த முடிவுகளை மீறிய நிலையில் ஏதாவது கிளர்ச்சிகள் நடைபெறுமானுல் அவைகளுக்கு எந்த ஆதரவும் தரவேண்டாம் என்றும், அமைதி காக்கிற பணியிலும், சமுதாய விரோதிகளைச் சுட்டிக் காட்டுகின்ற பணியிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளுமாறும் தமிழக மாணவர்களை இக்குழு கேட்டுக் கொள்கிறது.

'மொழிச் சிக்கலால் நாடு துண்டாகும்'

அரசியல் வாதிகள் நியாயமாக நடந்துகொள்ள வேண்டும்'

குடியரசுத் துணைத் தலைவர் வி. வி. கிரி எச்சரிக்கை

சென்னை, சன. 21—

"மொழிப் பிரச்சினையில் மக்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்; இராசதந்திரிகள் நியாயமாக நடந்து கொள்ள வேண்டும்; இல்லாவிடில், வருங்காலத்தில் மிகவும் இடர்ப்பாட்டுக்கு உள்ளாவோம்"

என்று இந்தியக் குடியரசின் துணைத் தலைவர் திரு. வி. வி. கிரி இங்கு எச்சரிக்கை செய்தார்.

திரு. ஸ்ரீராம தேசிகர் என்பவரால் சமஸ்கிருத மொழியில் மொழி பெயர்க்கப்பட்ட சிலப்பதிகார முதல் காண்டத்தை திரு. வி. வி. கிரி வெளியிட்டுப் பேசுகையிலேயே இந்த எச்சரிக்கையினை விடுத்தார்.

இந்த விழாவுக்கு, உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி திரு. எம். அனந்தநாராயணன் தலைமைவகித்தார்.

திரு. ம. பொ. சிவஞானம் அவர்கள் பாராட்டுரை வழங்கினர்.

திரு. கிரி அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :-

"நாட்டின் வட பகுதியில் உள்ள இளைஞர்களும், தென் பகுதியில் உள்ள இளைஞர்களும் மொழிப் பிரச்சினையில் ஒருவர் கழுத்தின் மீது மற்றொருவர் பாய்ந்து கொண்டிருக்கின்றனர்; இதன் விளைவாக நாடு துண்டாகும் அபாயம் இருக்கிறது.

"எனவே, இந்தப் பிரச்சினையில் தலைவர்களும், அரசியல்வாதிகளும் நன்கு சிந்தித்துச் செயல்பட வேண்டும்.

"மாணவர்கள் பொறுமையுடனும் நிதானத்துடனும் நடந்து கொள்வார்கள்; ஆனால், அவர்களிடத்தில் நிதானத்தை உண்டு பண்ணக்கூடிய பிரசாரம் நடைபெறவில்லை."

தமிழகத்துக்குக் கருநாடக மின்சாரம்

30 கோடி யூனிட் வரை வழங்க முடிவு

சென்னை, சன. 21—

தமிழகத்திற்கு 1968-ஆம் ஆண்டில் 30-கோடி யூனிட் மின் சக்தியை வழங்க கருநாடக மாநிலம் ஒப்புக்கொண்டுள்ளது.

இதற்கான ஒப்பந்தம் தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில்—திட்டக் குழு உறுப்பினர் திரு. ஆர். வெங்கட்ராமன் முன்னிலையில் கையெழுத்தாயிற்று.

தமிழக அரசின் சார்பில் பொதுப் பணித் துறைச் செயலாளர் திரு. ஆர். திருமலையும், கருநாடக அரசின் சார்பில், அந்த மாநிலப் பொதுப் பணித் துறைச் செயலாளர் திரு. சந்தப்ப பட்டேலும் கையெழுத்திட்டனர்.

தமிழகத் தொழிலமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியனும், கருநாடகப் பொதுப் பணித் துறையமைச்சர் திரு. வீரேந்திர பாட்டிலும், தமிழக மின்கழகத் தலைவர் திரு. வி. பி. அப்பாதுரையும் உடனிருந்தனர்.

முதல் 10-கோடி யூனிட்வரை, யூனிட்டுக்கு 5-காசுவீதமும், அதற்குமேல் யூனிட்டுக்கு 4.5-காசு வீதமும் வாங்கிக்கொள்ள கருநாடக அரசு ஒப்புக்கொண்டுள்ளது.

ஆந்திரத்தில் இந்தி எதிர்ப்பு

குடியரசு நாளைப் புறக்கணிக்க முடிவு

ஐதராபாத், சன. 21—

ஆந்திர மாநிலத்தில் மாணவர்களின் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகள் பரவிவருகின்றன.

ஹௌரா - சென்னை மெயில் உட்பட பல இரயில் வண்டிகளை, பல்வேறு இடங்களில் மாணவர்கள் நிறுத்தி, இந்தி எதிர்ப்பு வாசகங்களை எழுதிய பின், தொடர்ந்து செல்ல அனுமதித்திருக்கின்றனர்.

திருப்பதியில் கூடிய சித்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த பல்வேறு கல்லூரிகள்—பள்ளிகளின் மாணவர்கள் கூட்டத்தில், இந்தியை எதிர்க்குமுகத்தான் குடியரசு நாள் விழாவைப் புறக்கணிப்பது என்று முடிவெடுத்துள்ளனர்.

மதிப்புரை

அண்ணாமலைப் பேருரை

பேரறிஞர் அண்ணா அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆங்கிலத்தில் நிகழ்த்திய இலக்கியச் சிறப்புமிக்க பட்டமளிப்பு விழாப் பேருரையின் தமிழ் மொழிபெயர்ப்பு இந்நூல் (ஏற்கனவே 'மாலை மணி' இதழில் வெளியானது).

'இது ஒரு மொழிபெயர்ப்பு' என்று எந்த இடத்திலும் தோன்றுதவாறு தொடக்கம் முதல் முடிவு வரை அண்ணா நடையிலேயே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

அண்ணாவின் முழு உருவம் முகப்பில் அலங்கரிக்கும் அழகான பதிப்பு — 98 பக்கங்கள் — விலை ரூ. 1.50.

கிடைக்குமிடம் :—மணிமொழி பதிப்பகம், 21, பெருமாள் முதலி தெரு, சென்னை–14.

வாழ்வியற் கலைஞர்கள்

[ஆசிரியர் : வ. சுப்பிரமணியன் எம்.ஏ.; வெளியீட்டோர் : புது இலக்கியப் பதிப்பகம், 61, தம்பு செட்டி தெரு, சென்னை-1 ; 124 பக்கங்கள் ; விலை ரூ. 2.50]

இந்நூற்றுண்டு தந்த இணையற்ற வாழ்வியற் கவிஞர்களான தேசீயக் கவி சுப்பிரமணிய பாரதியார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் ஆகிய இருவரும், தாய் மொழிக்கும் தாய் நாட்டுக்கும் சமுதாய மறுமலர்ச்சிக்கும் பாடிய பாடல்களையும், அவர்களின் பாடல்களில் காணப்படும் கற்பனைத் திறத்தையும், கலையழகையும், கருத்தாழத்தையும் எடுத்துக்காட்டிச் சுவை விருந்து படைக்கிறார், இந்நூலாசிரியர்.

பாரதியையும் பாரதிதாசனையும், படிப்போர் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார்; அவர்களின் உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறார்; உணர்ச்சியை எடைபோட்டுச் சொல்கிறார்; கவிதை அழகை—இலக்கியச் செறிவை எல்லோருக்கும் படையலாக்குகிறார். படித்துச் சுவைக்க வேண்டிய நூல் இது.

மலேசியாவில் தமிழ் எழுத்தாளர்கள்

[தொகுப்பாசிரியர் : சி. வேலுசுவாமி; வெளியீட்டோர் : மலாசியாத் தமிழ் எழுத்தாளர் சங்கம், கோலாலம்பூர் ; விலை ஒரு வெள்ளி.]

மலேசியாவிலுள்ள தமிழ் எழுத்தாளர்களில் 225 பேர்களைப் பற்றிய விவரங்கள்—அவரவர் புகைப்படங்களுடன் இந்நூலில் தரப்பட்டுள்ளன.

இதில் காணப்படும் எழுத்தாளர்களில் பெரும் பகுதியினர் இளைஞர்களாகவே இருப்பினும், மலேசியாவில் நல்ல புகழ் ஈட்டியவர்களாகவும், நூல்கள் பல எழுதியவர்களாகவும் கவிஞர்களாகவும் காணப்படுகின்றனர்.

—மா. சே.

தேசிய விருது பெறும் தென்னகக் கைவினைக் கலைஞர்கள் !

சென்னை, சன. 23—

தென்னாட்டைச் சேர்ந்த கைத்தொழில் வல்லுநர்கள் ஐந்து பேர், தேசிய விருதை ஏற்பதற்கெனப் புதுடில்லிக்குச் சென்றிருக்கின்றனர்.

இவர்களில் மூவர் கேரளத்தையும், இருவர் தமிழகத்தையும்சேர்ந்தவர்கள் ஆவர். இவர்களும், இவர்களோடு 1967-ம் ஆண்டுக்குரிய தேசிய விருதுக்கென நாட்டின் மற்ற பகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள வேறு பத்துப் பேரும் சன. 25-ம் நாள் புதுடில்லியில் ஒரு சிறப்பு நிகழ்ச்சியில் இந்த விருதுகளைப் பெற்றுக்கொள்வார்கள்; குடியரசுத் துணைத் தலைவர் இவற்றை வழங்குவார்.

ஆண்டுதோறும் இவ்விருது, பாரம்பரியக் கைத்தொழில் கலையில் மிகச் சிறப்பான சாதனை காட்டுவோருக்கு வழங்கப்படுகிறது. வழிவழியாக வந்துள்ள கைத்தொழில் கலைக்கு ஊக்கமளித்து, இந்த வகைக் கலையில் சிறந்து விளங்குவோரைக் கௌரவிப்பது இதன் நோக்கம்.

துணி வேலைப்பாடு, கம்பள வேலை, உலோக-தந்த-மர வேலைப்பாடுகள், பிரம்பு-மூங்கில் கைவண்ணம், பொம்மைப் படைப்பு, தோல் வேலை, இசைக் கருவி அமைப்பு ஆகியவை உட்படப் பல வகைகள், பாரம்பரியக் கைத்தொழில்களைச் சேர்ந்தவை.

தேசிய விருதுகளைத் தவிர மாநில மட்டத்திலும் அரசாங்க விருதுகள், இவற்றில் மிகச் சிறப்பான சாதனைகளுக்காக வழங்கப்படுகின்றன.

'தேசிய விருது' என்பது, ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும், சித்திரத் தையல் கம்பளம் ஒன்றும், பெயர் பொறித்த அலங்காரத் தகடு ஒன்றும் அடங்கியதாகும்.

தென் அமெரிக்காவுக்கு புதிய கடல் வழி

புதுடில்லி, சன. 23—

எகிப்து - இஸ்ரேலிய மோதலின் எதிரொலியாக, சூயஸ் கால்வாய் மூடப்பட்டு இருக்கிறது அல்லவா? இதன் காரணமாக, இந்தியாவிலிருந்து ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளுக்குமிடையே இருந்து வந்த கப்பல் போக்குவரதது பெரிதும் பாதிக்கப்பட்டது. இதைச் சமாளிக்க, சூயஸ் கால்வாயைப் பயன்படுத்தாமலேயே தென் ஆப்பிரிக்காவிலுள்ள நன்னம்பிக்கைமுனை வழியாக நேரடியாகத் தென் அமெரிக்காவுக்குச் செல்லும் புதிய கடல் மார்க்கம் ஒன்றை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

தென் அமெரிக்கத் துறைமுகங்களுக்கு நேரடியாகக் கப்பல் விடுவதால், போக்குவரத்துச் செலவு கணிசமாகக் குறையுமென்று கூறப்படுகிறது.

அருவருப்பான சுவரொட்டிகள்

தடுப்பதற்கு டெல்லி தீவிரம்

புதுடில்லி, சன. 23—

ஆபாசமான முறையில் அமைந்த திரைப் படச் சுவரொட்டிகளையும், பிற விளம்பரங்களையும் தடை செய்வதில் தீவிரம் காட்டுமாறு மாநில அரசுகளை, மத்திய அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது.

இது தொடர்பாக மாநில அரசுகளுக்கு விடுத்துள்ள சுற்றறிக்கையில், 'திரைப் படச் சுவரொட்டிகளும், இதர விளம்பரங்களும், அதிகாரிகளின் அனுமதி பெற்ற பிறகுதான் வெளியிடப்பட வேண்டும்' என்ற விதியை ஊராட்சி மன்றச் சட்டத்தில் உருவாக்குமாறு மத்திய அரசு ஆலோசனை கூறியுள்ளது.

"பண்புக் குறைவான முறையில் விளம்பரங்கள் வெளியிட வேண்டாம்' என்றும் பல பிரபல விளம்பர நிறுவனங்களுக்கு மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு இலாகா வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரியானாவில் காங்கிரசு தலையெடுக்குமா?

இரண்டுபட்டு கிடக்கும் கட்சியைச் சரிசெய்ய நிஜலிங்கப்பா முயற்சி

புதுடில்லி, சன. 23—

அரியானா காங்கிரசுக் கட்சி இப்போது இரண்டு 'கோஷ்டி'களாகப் பிளவுபட்டிருக்கிறது. மாநில முன்னாள் முதல்வர் பகவத் தயாள் சர்மாவுக்கு ஆதரவாகச் சிலரும், மாநிலக் காங்கிரசுக் கட்சித் தலைவர் இராம் கிஷன் குப்தாவுக்கு ஆதரவாகச் சிலரும் பிரிந்து செயல்பட்டுவருகின்றனர்.

இந்த இரு கோஷ்டியினரும், அண்மையில் திரு. நிஜலிங்கப்பாவை டில்லியில் சந்தித்துப் பேசினர்; 'மாநிலக் காங்கிரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்குப் பகவத் தயாள் சர்மா தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்' என்று பகவத் தயாள் சர்மாவின் ஆதரவாளர்களும், 'இராம் கிஷன் குப்தாவே காங்கிரசுக் கட்சியின் தலைவராக நீடிக்க வேண்டும்' என்று இராம் கிஷனின் ஆதரவாளர்களும், நிஜலிங்கப்பாவிடம் வற்புறுத்தினர்கள்.

நிஜலிங்கப்பா, அரியானா மாநிலத்தில் நடைபெறவிருக்கும் மறு தேர்தலைச் சுட்டிக்காட்டி, 'காங்கிரசு வெற்றிபெற வேண்டும் என்ற ஒரே நோக்கத்துடன் இரு கோஷ்டியினரும் பிணக்குகளைத் தவிர்த்து ஒன்றுபட்டுச் செயலாற்ற வேண்டும்' என அறிவுரை கூறியதாகத் தெரிகிறது.

காங்கிரசுத் தேர்தல் பிரசாரத்தைத் துவக்கிவைக்க நிஜலிங்கப்பா, அடுத்த மாதம் அரியானாவுக்குச் செல்ல இருக்கிறாராம்.

ஸைரப்பர்

சிறந்த மோட்டார் உறுப்புகள்



பியட் 1100, ஹிந்துஸ்தான் அம்பாஸிடர்/லாண்ட்மாஸ்டர் கார்களுக்கும், பார்கோ, அசோகலேலாண்ட் பஸ்/லாரிகளுக்கும் உகந்தரப்பர் உறுப்புகள் தனித்தனியாகவும் ஒன்று சேர்ந்த உறுப்புகளுடனும் விநியோகிக்கப்படுகின்றன.

செயற்கை ரப்பரிலிருந்து உருவாக்கப்பட்ட ஸைரப்பர் உறுப்புகள் நீடித்து உழைக்கும்.

TVS

SIRUBBER

சுந்தரம் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்
இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்
ரப்பர் யூனிட், மதுரை 7

N.3960

பெங்களூரில் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் விளைவு

கல்லூரிகளை மூடிவிடுமாறு உத்தரவு

பெங்களூர், சன. 22—

பெங்களூர் நகரின் மத்தியப் பகுதியில்—பல்கலைக் கழகக் கட்டிடத்திற்கு அருகில்—இந்தி எதிர்ப்பு மாணவர்கள்மீது காவல் துறையினர் தடியடி நடத்தினர்; 200 கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசியுள்ளனர்; பலதடவைகள் வானத்தை நோக்கிச் சுட்டுள்ளனர்!

இந்த நடவடிக்கைகளைக் கருதி, சன. 23-ம் நாளிலிருந்து 27-ம் நாள்வரையில், பெங்களூர் பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ள கல்லூரிகள் அனைத்தும் மூடப்படும் என்று பல்கலைக்கழகப் பதிவு அதிகாரியின் பத்திரிகைக் குறிப்பொன்றில் உத்தரவிடப்பட்டிருக்கிறது.

போலீசார்மீது கூர்மையான கற்கள் வீசப்பட்டதால், நான்கு உதவிக் கமிஷனர்கள்—இரண்டு துணைக் கமிஷனர்கள் உள்ளிட்ட 112 போலீசார் காயமடைந்தனர் எனக் கூறப்பட்டிருக்கிறது.

30 மாணவர்கள் காயமடைந்தனர் எனத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

20 மாணவர்கள் உட்பட 26 பேர் கைது செய்யப்பட்டதாகக் கூறப்பட்டிருக்கிறது.

ஆட்சிமொழிச் சட்டத் திருத்தத்தின் விளைவு பற்றி மைசூர் முதலமைச்சர்

பெங்களூர், சன. 23—

"ஆட்சிமொழிச் சட்டத்துடன் இணைக்கப்பட்ட தீர்மானத்தால், வடக்கிலுள்ள மாணவர்கள் ஒரே ஒரு மொழியாக இந்தியை மட்டுமே கற்க வேண்டியிருக்க, தென்னகத்திலுள்ள மாணவர்கள் இரு மொழிகளைக் கற்கவேண்டிய நிலை உருவாகியிருக்கிறது; இந்நிலை, ஓரளவு அதிருப்தியை உருவாக்கியிருக்கிறது; 'பாரபட்சம் காட்டப்பட்டிருக்கிறது' என்றும், 'நமக்குச் சாதகமாக இல்லை' என்றும் தென்னாட்டவர் நினைக்கின்றனர்."

என்று, மைசூர் முதலமைச்சர் நிஜலிங்கப்பா கருத்தறிவித்துள்ளார்.

'தென்னாட்டவருக்கு அதிகச் சுமைதான்'

ஆந்திர முதலமைச்சர் ஒப்புக்கொள்கிறார்

காக்கினாடா, சன. 23—

கல்லூரிக் கட்டடம் ஒன்றுக்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில், ஆந்திர முதலமைச்சர் பிரும்மானந்த ரெட்டி கூறியிருப்பதாவது:-

"நாடாளுமன்றத்தில் நிறைவேறியுள்ள ஆட்சிமொழித் திருத்த மசோதாவினால், வடநாட்டவரைவிடத் தென்னாட்டவருக்கு அதிகச் சுமைதான் என்பதை ஒப்புக்கொள்கிறேன்."

கேரள முதல்வர் கடும் எச்சரிக்கை

தவறைஉணர்ந்தார் மத்திய அமைச்சர்!

திருவனந்தபுரம், சன. 23—

"'ஆங்கிலமே நாட்டின் இணைப்பு மொழியாக இருக்க வேண்டும்' என்பதுதான் கேரள அரசின் கொள்கையாகும்"

என்று, கேரள சட்டமன்றத்தில் முதலமைச்சர் நம்பூதிரிபாடு கூறியுள்ளார்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் அவர் தெரிவித்ததாவது:

"நாடாளுமன்ற மேலவையின் நடவடிக்கைகளின் விவரங்கள் அடங்கிய கடிதம் ஒன்று மாநில அரசுக்கு வந்தது; அதில் சில உரைகள் இந்தியில் இருந்தன; இந்தி உரைகளுக்கு ஆங்கில மொழிபெயர்ப்பு அனுப்புமாறு மத்திய உள்துறை அமைச்சகத்தை மாநில அரசு கேட்டது; கேரளப் பல்கலைக் கழகத்தின் இந்தி இலாகாவிடம் அந்த இந்தி உரைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கொள்ளுமாறு உள்துறை அமைச்சகம் கேட்டுக்கொண்டது. இதுபோன்று பதில் கிடைத்ததும், உடனே நான் உள்துறை அமைச்சருக்கு எழுதிய கடிதத்தில்,

"இந்தி பேசாத மாநிலங்களிடம் இத்தகைய கொள்கையைப் பின்பற்றுவதென மத்திய அரசு முடிவு செய்திருந்தால், இதுவரை இந்தியை எதிர்க்காமல்இருக்கும் கேரளமும் இந்தியை எதிர்க்கத் துவங்கும்; அதன் பயனாக இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகள் கேரளத்திலும் தலைகாட்டும்"

எனக் குறிப்பிட்டிருந்தேன்,

"உடனே உள்துறை அமைச்சர் சவான், 'தவறு நடைபெற்றுவிட்டது; மாநில அரசுக்கு இனிமேல் இந்தியில் கடிதங்கள் அனுப்பப்பட மாட்மாட்டாது; அல்லது அனுப்பப்பட்டால், அவற்றுக்கு ஆங்கில மொழிபெயர்ப்பு அனுப்படும்' என்று உறுதிமொழி அளித்திருக்கிறார்."

ஜனவரி 25:

வீர வணக்க நாள்

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தும் நாளாக சனவரி 25-ம் நாள் கொண்டாடப்படுகிறது.

கீழ்க்கண்ட இடங்களில் கலந்துகொள்வோர் விவரம் வருமாறு:—

சென்னை	....	தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா
மதுரை	....	கல்வி அமைச்சர் இரா. நெடுஞ்செழியன்
கும்பகோணம் (தஞ்சை)	....	பொதுப்பணி அமைச்சர் மு. கருணாநிதி
சேலம்	....	உணவு அமைச்சர் கே. ஏ. மதியழகன்
கோவை	....	சட்ட அமைச்சர் செ. மாதவன்
சிதம்பரம் (தென் ஆற்காடு)	....	வேளாண்மை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி
திருச்சி	....	உள்ளாட்சி அமைச்சர் மா. முத்துச்சாமி
காஞ்சி (செங்கற்பட்டு)	....	தாழ்த்தப்பட்டோர் நல அமைச்சர் சத்தியவாணிமுத்து
திருநெல்வேலி	....	பொதுநல அமைச்சர் எஸ். ஜே. சாதிக் பாட்சா
உதகமண்டலம் (நீலகிரி)	....	சட்டப் பேரவைத் தலைவர் ஆதித்தனார்
காரைக்குடி (முகவை)	....	அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி.
தர்மபுரி	....	வெளியீட்டுச் செயலாளர் சி. பி. சிற்றரசு எம்.எல்.சி.
வேலூர் (வடஆற்காடு)	....	நாடாளுமன்ற தி.மு.க. தலைவர் க. அன்பழகன்
நாகர்கோவில் (குமரி)	....	நாடாளுமன்ற தி.மு.க.துணைத்தலைவர் கி. மனோகரன்

மற்ற இடங்களில் நடைபெறும் வீர வணக்கக் கூட்டங்களில் ஆங்காங்கே உள்ள நாடாளுமன்ற—சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்டச் செயலாளர்கள், கழக முன்னணியினர் கலந்துகொள்வர்.

தொடர்ந்து சனவரி 28-ம் நாள் நாடெங்கும் நடைபெறும் கழகக் கூட்டங்களில் மொழிப் பிரச்சினை குறித்து விளக்கிக் கழக முன்னணியினரும், சட்டமன்ற—நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள்.

—தலைமைக் கழகம், தி.மு.க.

படித்தீர்களா?

'ஹோம் ரூல்' பொங்கல் மலரில்

அறிஞர் அண்ணாவின்

★ உதயத்தை நோக்கி.... [தம்பிக்கு மடல்]

அறிஞர் அண்ணாவுடன்
கனடா நாட்டுத் தம்பதிகள் பேட்டி

★ மூவேந்தர் உலா [நாடகம்]

மற்றும் கவிதை, கட்டுரைகளுடன் விற்பனையாகிறது

48 பக்கங்கள் — 40 காசுகள்

விவரங்கட்கு:
9, அவின்யூ சாலை, சென்னை - 34

நடக்க இருப்பவை

24--1--68

கறம்பக்குடி

நகர தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு வள்ளுவர் திடலில்; தலைவர்: சிவ. பாலகிருஷ்ணன்; பேசுவோர்: நன்னிலம் அ. நடராசன், பி. முருகையன், நாவளவன் நம்பி, மற்றும் பலர்.

25--1--68

திருக்கோவலூர்

எம்.ஜி.ஆர். மன்றத் திறப்பு விழா; மாலை 7 மணிக்கு சன்னதி வீதியில்; தலைவர்: இரா. குலசேகரன்; மன்றத் திறப்பாளர்: அ. சே. குமாரசாமி பி.எஸ்சி.; எம்.ஜி.ஆர். படத் திறப்பாளர்: வெ. கிருஷ்ணமூர்த்தி எம்.பி. (முருகுபாண்டியன் கலை நிகழ்ச்சி நடைபெறும்).

க. பரமத்தி

தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு; தலைவர்: ப. வே. சுப்பராயன்; பேசுவோர்: சி. தமிழரசி பி.ஏ., எஸ். கந்தசாமி எம்.எல்.ஏ., ஆர். என். இராமசாமி, எஸ். நல்லசாமி, கே. கனகராசு பி.ஏ.பி.எல்., பரமத்தி சண்முகம், கே. ஜி. உமாகாந்தன், மற்றும் பலர்.

குழுக் கூட்டம்

"பங்களூர் 1-வது வட்ட எசலந்தபுரம் தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம், 26—1—68 பிற்பகல் 2 மணியளவில், சிக்க முனுசாமி பி.ஏ. அவர்கள் இல்லத்தில் நடைபெறும்" என்று செயலாளர் மு. மதிமாறன் அறிவிக்கிறார்.

நாமக்கல் பாரதிதாசன் மன்ற அமைப்புக் கூட்டம்

25—1—68 மாலை 3 மணிக்கு நாமக்கல் கணேசபுரம் திராவிடர் கழகக் (தமிழ்ச் சங்கம்) கட்டிடத்தில் பாவேந்தர் பாரதிதாசன் மன்ற அமைப்புக் கூட்டம நடைபெறும்.

புலவர் அறிவுடைநம்பி

சுற்றுப்பயணம்

சன. 24: கடலூர்—அய்யம்பேட்டை; 25: திருப்பூர்; 26: நாகர்கோயில்; 27: மதுரை—செல்லூர்; 28: குருவிக்கரம்பை; 29: பெரியகுளம். பிப். 4, 5; ஆமதாபாத்; 8, 9, 10: பும்பாய்.

கா. காளிமுத்து

நிகழ்ச்சிகள்

சன. 25: பனைக்குளம், திருப்புல்லாணி; 26: நெல்லை; 27: கொண்டயம்பட்டி; 28: பெங்களூர். பிப். 4: தேவகோட்டை, மதுரை; 11: கரண்டை, கடையம்.

தஞ்சை மாவட்ட

தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டம்

"25—1—68 காலை 9-30 மணியளவில், தஞ்சை மாவட்ட தி. மு. கழகப் பிரதிநிதிகள் அவசரக் கூட்டம், குடந்தை தி. மு. கழகக் கட்டிடத்தில் நடைபெறும்; இதனையே அழைப்பாகக் கருதி. பிரதிநிதிகள் — பொதுக்குழு உறுப்பினர்கள் — சட்டமன்ற உறுப்பினர்கள் தவறுது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்; பொருள்: இந்தி எதிர்ப்புப் பிரச்சினை"

என்று, தஞ்சை மாவட்ட தி.மு.க. செயலாளர் மன்னை ப. நாராயணசாமி அறிவிக்கிறார்.

மதுரை மாவட்ட

தி. மு. க. பிரதிநிதிகள் கூட்ட

"மதுரை மாவட்ட தி.மு.க. பிரதிநிதிகள்—பொதுக்குழு உறுப்பினர்கள்—சட்டமன்ற உறுப்பினர்களின் கூட்டம் 25—1—68 காலை 10-மணியளவில், மதுரை மாவட்ட தி. மு. க. அலுவலகத்தில் (8-சி, யானைக்கல் ரோடு) கல்வி அமைச்சர் மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முன்னிலையில் நடைபெறும்; இதையே அழைப்பாகக்கொண்டு உறுப்பினர்கள் அனைவரும் தவறுது வருகைதர வேண்டுகிறேன்"

என்று, மதுரை மாவட்டச் செயலாளர் எஸ். முத்து எம்.எல்.சி. அறிவிக்கிறார்.

அடிக்கல் நாட்டு விழா

அமைச்சர் நெடுஞ்செழியன் கலந்துகொள்கிறார்

24—1—68 மாலை 5-30 மணிக்கு பெரியமேடு—அம்பேத்கார் நகரில் உள்ள சென்னை மாநகராட்சி உயர் துவக்கப் பள்ளித் துணைக் கட்டிடத்திற்கு, மேயர் அபிபுல்லா பேக் தலைமையில் — ஆர். எஸ். தம்பி முன்னிலையில் அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அடிக்கல் நாட்டுவார்.

'சிறந்த நடிகர்கள்'

எஸ். எஸ். இராசேந்திரன்-- விசயகுமாரிக்குப் பரிசு

சென்னை, சன. 2[illegible]

1967-68-ம் ஆண்டில், கலைத் துறைகளில் சிறந்த கலைஞர்களுக்குத் தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் விருது வழங்கும் திட்டத்தின்கீழ், சிறந்த நடிகைக்கான பரிசு விசயகுமாரிக்கும், சிறந்த நடிகருக்கான பரிசு எஸ். எஸ். இராசேந்திரனுக்கும் அளிக்கப்பட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.